**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**OS No.1/2021**

2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 14-ம் நாள் 1872-ம் ஆண்டு சட்டத்தின் பிரிவு 58-ன் ஏற்பாட்டின் படி வாதி/பிரதிவாதி என்பவரது சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

## Cross Continuation of DW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசந்திரன் | தந்தை பெயர் | குட்டையகோனார் |
| கிராமம் | பல்லவராயன்பட்டி | தாலுகா | கந்தர்வகோட்டை |
| வயது | 70 | தொழில் | விவசாயம் |

நாள் : 14.11.2025
பி.வா.சா.1

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

7) எங்கள் குடும்பத்திற்குள் 1994 ஆம் ஆண்டு எழுதிக்கொள்ளப்பட்ட பாகப்பிரிவினை பத்திரம் இதுநாள் வரை ரத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். அந்தஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ள தங்கராசு என்பவர் வடக்கு பிள்ளையார் கோவில் பூசாரி என்றால் சரிதான். அவர் இறந்து விட்டார். தங்கராசுவிற்கு 4 மகன்கள் உள்ளார்கள், நான்கு பேரும் உயிருடன் உள்ளார்கள். அந்த ஆவணத்தில் மற்றொரு சாட்சி கையொப்பம் செய்துள்ள கோவிந்த கோனார் மகன் ரெங்கசாமி என்பவருக்கும் எனக்கும் விரோதம் உள்ளதா என்றால் இல்லை. பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்ட சொத்துக்களுக்கு 1994 ஆம் ஆண்டில் மதிப்பு என்ன என்பதற்கும் தற்போதைய மதிப்பு என்ன என்பதற்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை, A அட்டவணை சொத்தின் மதிப்பு 12 இலட்சம் ஆகும்.

8) சொத்தின் மதிப்பைக்காட்டுவதற்கான ஆவணங்களை தாக்கல் செய்தால், உண்மை நிலவரம் தெரியவந்துவிடும் என்பதால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வங்கியில் கடன் பெற வேண்டும் என்றால் சொத்தின் இரண்டு உரிமையாளர்களும் கடன்தாரர்களாகவோ, கூட்டுக்கடன் தாரர்களாகவோ அல்லது ஒருவர் ஜாமின்தாரர்களாகவோ கடன் பெறலாம் என்றால் சரியல்ல. அப்போது வங்கியின் மேலாளர் கேட்டதால், வாதி பெயரில் ஆவணம் ஏற்படுத்தி கடன் பெற்றோம். வங்கி மேலாளர் கேட்டதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கடனை நான் ஒரு தவணையாவது திருப்பி செலுத்தியுள்ளேனா என்றால்

கூட்டுக்குடும்பமாக இருந்த போது, வாதி தான் வரவு, செலவு செய்தார். அதனால் அவர் தான் செலுத்தினார்.

9) நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தோம் என்பதை காட்டுவதற்கு நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான அடங்கலில் சாகுபடிதாரராக வாதியின் பெயர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வங்கியில் கடன் பெறுவதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். தாவா சொத்திற்கு, நான் வரி செலுத்தியதாக எந்த வரி ரசீதும் என்னிடம் இல்லை என்றால் சரிதான். வாதி பெயரில் உள்ள பட்டா மற்றும் அடங்கலை எனது பெயரில் மாற்றுவதற்கு நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில் நான் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வாதிகளை விட கூடுதலாக படித்துள்ளேன் என்றால் சரிதான். வாதி 4 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார் என்றாலும் நான் பியூசி படித்துள்ளேன் என்றாலும் வாதி 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார், நான் பியூசி படித்துள்ளேன்.

10) வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்று கூறி வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் இந்த வழக்கில் பரிகாரம் ஏதும் கோரவில்லை என்றாலும் சரியல்ல. 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற பாகப்பிரிவினையை மறுதிறப்பு செய்து, பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாதி பஞ்சாயத்தின் மூலமாக தருவதாக சொன்னார், பஞ்சாயத்தார்கள் தற்போது இறந்துவிட்டார்கள். பஞ்சாயத்து நடந்த தேதி மற்றும் பஞ்சாயத்தார்கள் யார் யார் என்ற விபரத்தை எனது எதிர் வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதி எத்தனை முறை பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றால் ஒரு முறை பஞ்சாயத்து தலைவராக இருந்தார். எனக்கு சத்துணவு அமைப்பாளராக வேலை கிடைத்த போது, வாதி பஞ்சாயத்து தலைவராக இருந்தார் என்றால் சரிதான். அவரது பணிக்காலம் முடிந்த பிறகு, கொடுக்கப்பட்ட பணிநீட்டிப்பில் பஞ்சாயத்து தலைவராக இருந்தார்.

11) எனது சகோதரி பழையாத்தாள் திருமணத்தின் போது, என்னென்ன சீர்வரிசை கொடுக்கப்பட்டது என்பதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் ஆவணம் எனது அப்பாவிடம் உள்ளது. நான் கேள்விகளுக்கு நேரடியாக பதில் சொல்லாமல் முன்னுக்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரை பாரா 2, 3 இல் நான் கூறியுள்ள விபரங்கள் பொய்யானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.5

வரையிலான ஆவணங்களில், கூட்டுக்குடும்ப சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தின் மூலமாக கிரையம் வாங்கப்பட்டதாக வாசகம் உள்ளதா என்றால் இல்லை, பொதுவாக கிரைய ஆவணத்தில் அவ்வாறு வாசகம் எழுதமாட்டார்கள். மேற்படி ஆவணங்களில், வாதியின் பணத்தை கொண்டு கிரையம் பெற்றதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, எனது அப்பா, அம்மா சம்பாதித்த பணத்தை கொண்டு தான் வாங்கப்பட்டது. எனது அப்பா, அம்மா எவ்வளவு சம்பாதித்தார்கள் என்பது குறித்த குறிப்புகள் எதுவும் உள்ளதா என்றால் எனது அப்பா, அம்மா படிப்பறிவு இல்லாதவர்கள், வாதி எனது அப்பா, அம்மா உயிருடன் இருக்கும் போது சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளார். வாதி, மரம் வியாபாரம் செய்து, அதில் கிடைத்த வருமானத்தை வைத்து, சொத்துக்களை அவர் பெயரில் கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல.

12) வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை பத்திரத்தில், எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்திற்கு ரோட்டிற்கு கிழக்கு என நான்கெல்லை போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாலையை ஒட்டியுள்ள இடங்கள், பிளாட் போடப்பட்டு, அதன் மதிப்பு அதிகமாக உள்ளது என்றால் சரியல்ல. பொதுக்குடும்ப சொத்தின் வருமானத்திலிருந்து வாதி கிரையம் பெற்றதாகவும், வங்கியில் கடன் பெறுவதற்காக வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டதாகவும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 உண்மையான பாகப்பிரிவினை பத்திரம் என்றாலும் வாதி, அவரது தேவைக்காக கடன் பெற்று, அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்திலிருந்து வந்த வருமானத்தை வைத்து கடனை அடைத்தார் என்றாலும் சரியல்ல. தாவா சொத்து, எனது அனுபவத்தில் வந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல்செய்துள்ளேனா என்றால் வாதி தான் மொத்த அனுபவம். அதனால், வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

13) எனது சகோதரர் கடுமையாக உழைத்து, என்னையும் நல்ல நிலைமைக்கு ஆளாக்கி, வேலை வாங்கிக்கொடுத்து, திருமணம் செய்து வைத்தார் அதனால் தான் நான் அவரை எந்த சமயத்திலும் எதிர்த்து பேசுவதில்லை என்றால் சரியல்ல, வாதிக்கு புது மாடி வீடு கொடுக்கப்பட்டுள்ளது, எனக்கு பழைய மாடி வீடு, அதில் மின் இணைப்பு கூட இல்லை, வாதியின் பெயரில் இருப்பதால், மின் இணைப்பு பெறுவதை தடுத்து வருகிறார். வாதிக்கு மாடி வீடு இல்லை என்றாலும் எனக்கு மின் இணைப்பு உள்ளது என்றாலும் சரியல்ல. எனது

எதிர்வழக்குரை 5 ஆம் பாராவில், பாகப்பிரிவினையில் கண்ட சில சொத்துக்களை வாதி கிரையம் செய்து கொடுத்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு கிரையம் பெற்ற நபர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும் அந்த ஆவணங்களை பொறுத்து நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் அது ஏற்பட்ட காலத்திலேயே அமலுக்கு வந்துவிட்டது என்றால் சரியல்ல.

14) வாதி நன்கு உழைத்து முன்னுக்கு வந்துவிட்டார் என்பதால், காழ்புணர்ச்சி கொண்டு பொய்யாக கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில், நான் எதிர்கோரிக்கை வழக்கு எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**